சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.பெ.க. சிவகுமார்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2023 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2052, சுபகிருது ஆண்டு தைத் திங்கள் 27 ஆம் நாள்)

**அசல் வழக்கு .எண்.63/2020**

**CNR.No. TNCB190002202020**

திருமதி. இந்திராணி ....வாதி

-இடையே-

1. திரு. எஸ்.பரமேஸ்வரன்
2. திருமதி,. சாந்தாமணி
3. திரு. எஸ்.வேலுச்சாமி ....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 11.01.2023 ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. பி. தேவிசரவணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 3 ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. டீ. அர்ஜுணன் அவர்கள் முன்னிலையாகியும், பதிலுரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தை கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. வழக்குச் சொத்துக்களில் 1/3 பாகம் பாகப்பிரிவினை வேண்டியும் 1ம் பிரதிவாதியின் பெயரிலான செட்டில்மெண்ட் பத்திரமும், 3 ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள விலை ஆவணமும் வாதியின் 1/3 பாகத்தை பொறுத்து வாதியை

கட்டுப்படுத்தாதென்று விளம்புகை வேண்டியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. வழக்குரையின் சுருக்கம் :-

2(1) வாதி மற்றும் பிரதிவாதிகள் சகோதர சகோதரிகள். மூவரும் சுப்பையனின் வாரிசுகள். வழக்குச் சொத்துக்களும் இதர சொத்துக்களும் வாதியின் தாத்தா ரங்கே கவுடர் அவர்களின் கூட்டு குடும்ப பூர்வீக சொத்துக்கள் ஆகும். ரங்கே கவுடர் இறந்த பிறகு வாதியின் தந்தை சுப்பைய கவுடரும் அவரது சகோதரரும் 14.09.2005 தேதியில் வழக்குச் சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பாகம் செய்து கொண்டதில் வழக்குச் சொத்துக்கள் வாதியின் தந்தைக்கு ஒதுக்கப்பட்டது. பாகசாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன்படி சுப்பையா கவுடர், வாதி 1,2 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் கூட்டாகவும் பொதுவாகவும் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்தார்கள்.

2(2). வாதியின் தந்தை எவ்வித ஆவணங்களையும் ஏற்படுத்தாமல் கடந்த 19.03.2016 அன்று இறந்து விட்டார். வாதியின் தாயார் 21.09.2015 ல் இறந்து விட்டார். அதன்பின்பு வாதியும் 1,2 பிரதிவாதிகளும் வழக்குச் சொத்துக்களை சுவாதீனம் எடுத்து கூட்டாகவும் பொதுவாகவும் அனுபவித்து வருகிறார்கள். வழக்குச் சொத்துக்களில் வாதிக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் தலா 1/3 பாக உரிமை உள்ளது. வாதியின் பாகத்தை கேட்டு பிரதிவாதிகள் தர மறுத்துவிட்டார்கள். கடந்த 19.10.2015 ம் தேதியில் வாதியின் தந்தை சுப்பைய கவுடரிடமிருந்து வாதிக்கு சேரவேண்டிய பாகத்தை ஏமாற்றும் நோக்கத்தோடு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்தி உள்ளார். வாதிக்கு அந்த பத்திரத்தின் விபரம் 04.05.2018 அன்றுதான் தெரிய வந்தது. கடந்த 30.07.2021 தேதியில் 1ம் பிரதிவாதியும் 3ம் பிரதிவாதியும் வாதியின் பாகத்தை ஏமாற்றும் நோக்கத்தோடு மோசடியாக 3ம் பிரதிவாதியின் பெயரில் கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர். மேற்கண்ட ஆவணங்கள் வாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. ஆகவே, வழக்குச் சொத்துக்களில் 1/3 பாகம் பாகப்பிரிவினை வழங்கி 1ம் பிரதிவாதியின் பெயரிலான செட்டில்மெண்ட் பத்திரமும், 3ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள விலை ஆவணமும் வாதியின் 1/3 பாகத்தை பொறுத்து

வாதியை கட்டுப்படுத்தாதென்று விளம்புகையும் செய்ய வேண்டும்.

03. வாதி கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

04. வாதி தரப்பில் 1 சாட்சி விசாரிக்கப்பட்டு 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

05. வாதி தனது வழக்குரையை பின்பற்றி சாட்சியத்தை முன்வைத்துள்ளதோடு தனது வழக்கை நிரூபிக்க ஏதுவாக பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகல், பட்டா, 1ம் பிரதிவாதியின் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரம் 3ம் பிரதிவாதியின் பெயரிலான கிரைய பத்திரம், சுப்பையனின் இறப்பு சான்றிதழ் நஞ்சம்மாளின் இறப்பு சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தோன்றி பிரதிவாதிகள் வாதியின் உரைக்கு பதிலுரை தாக்கல் செய்யவோ, வாதியை குறுக்கு விசாரணை செய்யவோ, எவ்வித முன்முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

06. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாதியின் தந்தைக்கும் அவரது சகோதரரான கணபதி கவுடரின் வாரிசுகளுக்குகிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரமான வா.சா.ஆ.1 பரிசீலனை செய்கையில் அப்பத்திரத்தில் " **1 இலக்கமிட்டவரின் தகப்பனாரும், 2 இலக்கமிட்டவரின் மாமனாரும், 3 முதல் 6 இலக்கமிட்டவர்களின் தகப்பனை பெற்ற பாட்டனாருமாகிய மேற்படி காலஞ்சென்ற ரங்கே கவுடர் அவர்களுக்கும் மேற்படியாரது மனைவி சுப்பம்மாள் அவர்களுக்கும் மேற்படியார்களது பொது குடும்ப சொத்துக்களிலிருந்து பாகமாக பிரிந்து வந்த சொத்துக்களை மேற்படியார்கள் சர்வ சுதந்திரமாக அனுபவித்து வந்து**" என உரைகள் காணப்பட்டுள்ளது.

07. மேற்கண்ட உரைகளை ஆழ்ந்து பரிசீலனை செய்கையில் வழக்குச் சொத்து உள்ளிட்ட சொத்துக்களானது வாதியின் தாத்தாவிற்கு முன்பே அவை குடும்ப சொத்துகளாக இருந்துள்ளதென்பது தெளிவாகிறது. ஆகவே, மேற்கண்ட சொத்துக்களை பொறுத்து வாதி 4 வது தலைமுறை ஆவார். எப்படி எடுத்துக்

கொண்டாலும் மேற்கண்ட சொத்துக்களை கூட்டுக் குடும்ப சொத்துக்களென்றோ, பூர்வீக சொத்துக்களென்றோதான் முடிவிற்கு வர முடியும். அவ்வாறான சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தை வாதியின் தந்தை பாகப்பிரிவினை செய்து பெற்ற சமயத்திலேயே அச்சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்களாகிவிடுமென்றபோதிலும், அச்சொத்துக்களை பொறுத்து எவ்வித பாராதீனமும் செய்வதற்கு முன்பாக அவருக்கு பிள்ளைகள் பிறக்கும்பட்சத்தில் அச்சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்கள் என்ற தகுதியை அடைந்துவிடுமென்றும், அவ்வாறு பிள்ளைகள் பிறந்த பிறகு முழுச் சொத்துக்களை பொறுத்து ஏதேனும் உரிமை மாற்றம் செய்ய பாகப்பிரிவினை பெற்ற நபருக்கு உரிமையில்லையென்றும், கீழ்கண்ட முன்தீர்ப்பு நெறியில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

***2013 ( 4) CTC 539***

***SUPREME COURT OF INDIA***

***Rohit Chauhan – vs – V. Surinder singh and others***

*On partition an ancestral property remains in the hands of a single person, it has to be treated as a separate property and such a person shall be entitled to dispose of the coparcenary property treating it to be his separate property but if a son is subsequently born, the alienation made before the birth cannot be questioned. But, the moment a son is born, the property becomes a coparcenary property and the son would acquire interest in that and become a coparcener.*

08. ஆகவே, வழக்குச் சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் வந்திருந்தாலும் அச்சொத்துக்களை உரிமைமாற்றம் செய்வதற்கு முன்பாக வாதி பிறந்துவிட்டதால் அச்சொத்துகளில் வாதியின் தந்தை மற்றும் வாதியின் சகோதரராகிய 1ம் பிரதிவாதி, சகோதரியாகிய 2 ம் பிரதிவாதி ஆகியோருடன் வாதியும் உடன் பங்குரிமையர் ஆவார். வழக்குச் சொத்துக்களை முழுமையாக வாதியின் தந்தையாகிய சுப்பையன் வாதியின் சகோதரராகிய 1ம் பிரதிவாதி பரமேஸ்வரனுக்கு வா.சா.ஆ.3

செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைக்க இயலாது. அதேவேளையில் வாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியின் பெயருக்கு வாதியின் பாகத்தையும் சேர்த்து விலை ஆவணம் ஏற்படுத்த இயலாது. ஆகவே, வாதிக்கு வழக்குச் சொத்தில் 1/4 பாகம் பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதென்றும், வாதியின் மேற்கண்ட பாகத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியின் பெயரிலான 19.10.2015 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணமும், 3ம் பிரதிவாதியின் பெயரிலான 30.07.1912 தேதியிட்ட விலை ஆவணமும், வாதிக்குரிய 1/4 பாகத்தை பொறுத்து வாதியை கட்டுப்படுத்தாதென விளம்புகை செய்யலாமென்றும், இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

09. இறுதியாக,

1. வழக்குச் சொத்தில் வாதிக்கு ¼ பாகம் பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதென தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. 1ம் பிரதிவாதியின் பெயரிலான 19.10.2015 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணமும், 3ம் பிரதிவாதியின் பெயரிலான 30.07.1912 தேதியிட்டவிலைஆவணமும், வாதிக்குரிய 1/4 பாகத்தை பொறுத்து வாதியை கட்டுப்படுத்தாதென விளம்புகை செய்யப்படுகிறது.

3. வழக்கின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,

## வாதி தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.09.2005 | பாக பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | -- | பட்டா | கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 19.10.2015 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 30.07.2012 | 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்திம் | ஆன்லைன் நகல் |
| வா.சா.ஆ.5 | 23.05.2008 | சுப்பையனின் இறப்பு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.6. | 16.5.2008 | நஞ்சம்மாளின் இறப்பு சான்றிதழ் | நகல் |

## சாட்சிகள் பட்டியல்

வாதி தரப்பில் — பிரதிவாதிகள் தரப்பில்

வா.சா.1.திருமதி. இந்திராணி — --இல்லை--

Sd/- பெ.க.சிவக்குமார்
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,